**நவம்பர் – 16**

# TNPSC துளிகள்

- விமானப் போக்குவரத்து அமைச்சகமானது 2008 ஆம் ஆண்டு விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் கீழ் மகாராஷ்டிராவின் ஷீரடி விமான நிலையத்தை ஒரு முக்கிய விமான நிலையமாக அறிவித்தது.
  - இந்த அறிவிப்பின் மூலம், விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையமானது (AERA - Airports Economic Regulatory Authority) இந்த விமான நிலையத்தின் வானூர்திச் சேவைகளுக்கான கட்டணத்தை நிர்ணயம் செய்யும்.
- சுதந்திர ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஃபுமியோ கிஷிடா ஜப்பான் நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
  - 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜப்பான் நாட்டின் பிரதமர் யோஷிஹிட் சுகா தனது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து ஃபுமியோ கிஷிடா பதவி ஏற்றார்.
- இங்கிலாந்தின் பர்மிங்காம் நடைபெற உள்ள 2022 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி தனது அறிமுக ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது.
  - மகளிர் கிரிக்கெட் அணியானது டி20 பிரிவில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் அறிமுகமாகிறது.

# தேசியச் செய்திகள்

## தொழில்நுட்பத் தொழில்முனைவோர் தொடர்

- கேரளப் புத்தாக்க நிறுவனத் திட்டம் மற்றும் சிஸ்கோ லாஞ்ச்பேட் ஆக்சிலரேட்டர் புரோகிராம் அமைப்பு (CLAP - Cisco LaunchPad Accelerator Program) ஆகியவை இணைந்து முன்னோடியான தொழில்நுட்பத் தொழில்முனைவோர் தொடரை நடத்த உள்ளது.
- இந்தியத் தொழில்நுட்பத் தொழில்முனைவோர் தொடர் ஆனது கேரளாவில் உள்ள கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட உள்ளது.
- இது நவம்பர் 15 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 19 ஆம் தேதி அன்று முடிவடையும்.
- இந்த முன்முயற்சியானது புதிய காலச் சவால்களைத் தீர்ப்பதற்கு வேண்டி புதிய நிறுவனங்களைச் செயல்படுத்தும் வகையில் புதுமை மற்றும் ஒத்துழைப்புக்கான ஒரு தளத்தை வழங்கும்.

## பாராளுமன்ற நட்புறவுச் சங்கம்

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து தங்களது "பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை" புத்துயிர் பெறச் செய்துள்ளன.
- இதன் தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்சே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இலங்கையின் வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சர் G.L. பீரிஸ் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான "நெருக்கமான நாகரீக உறவுகளை" பற்றி குறிப்பிட்டார்.
- இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஒரு மிகப் பெரிய கொடை பௌத்தம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

- இந்தச் சங்கமமானது இரு நாடுகளுக்கும் இடையேயான பாராளுமன்றப் பரிமாற்றங்களை "புத்துயிர் பெறச் செய்யவும்" அவற்றின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் உதவும்.
- இந்தியாவிடமிருந்து உரங்களை வாங்க முடிவு செய்ததையடுத்து இலங்கை அரசானது இந்தியா-இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவை உருவாக்கியது.



## அன்னபூர்ணா தேவியின் சிலை



- சமீபத்தில் கனடாவில் இருந்து கண்டெடுக்கப்பட்ட அன்னபூர்ணா தேவியின் சிலை ஒன்று வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் மீண்டும் வைக்கப்பட உள்ளது.
- இந்தச் சிலையானது 100 ஆண்டுகளுக்கு முன்பு வாரணாசியில் இருந்து திருடப்பட்டது.

- இதன் உயரம் 17 செ.மீ., அகலம் 9 செ.மீ., தடிமன் 4 செ.மீ ஆகும்.

## சக்தி 2021

- இந்திய ராணுவமானது பிரான்சு நாட்டு ராணுவத்துடன் இணைந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தும் பயிற்சியான 6வது சக்தி 2021 என்ற ஒரு பயிற்சியினை நடத்துகிறது.
- ஏற்கெனவே 2021 ஆம் ஆண்டில் இந்தியா பிரான்சு நாட்டுடன் இணைந்து கூட்டுக் கடற்படைப் பயிற்சிகள் மற்றும் விமானப்படை பயிற்சிகள் போன்றவற்றை நடத்தியது.
- சக்தி 2021 பயிற்சியானது நவம்பர் 15 முதல் நவம்பர் 26 வரை பிரான்சிலுள்ள ஃப்ரீஜஸ் நகரில் நடத்தப்படுகிறது.
- இந்தப் பயிற்சியில், இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கோர்க்கா ரைபிள்ஸ் காலாட்படை பிரிவின் வீரர் குழு பங்கேற்கும்.

## மாநிலங்களவையின் புதியப் பொதுச் செயலாளர்

- P.P.K. ராமாச்சார்யுலு அவர்களுக்குப் பதிலாக பிரமோத் சந்திர மோடி மாநிலங்களவையின் புதியப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.
- அதே சமயம் ராமாச்சார்யுலு ஒரு வருடக் காலத்திற்கு ஆலோசகராக மறு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- ராமாச்சார்யுலு தற்போது மாநிலங்களவைச் செயலகத்தில் ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- பிரமோத் சந்திர மோடி 1982 ஆம் ஆண்டு குழுமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இந்திய வருவாய் பணி அதிகாரியும் மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் முன்னாள் தலைவரும் ஆவார்.

## ஹபீப்கஞ்ச் இரயில் நிலையத்தின் பெயர் மாற்றம்




- மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள "அதி நவீனமான" ஹபீப்கஞ்ச் இரயில் நிலையத்திற்கு கோண்ட் இன அரசின் ராணியான கமலாபதியின் பெயரானது சூட்டப்

பட்டுள்ளது.

- ராணி கமலாபதி கோண்ட் சமூகத்தின் பெருமையும் போபாலின் கடைசி இந்துமத ராணியும் ஆவார்.
- அவரது இராஜ்ஜியத்தை ஆப்கானியத் தளபதி தோஸ்த் முகமது என்பவர் வஞ்சகம் செய்து அபகரித்தார்.

## இந்திய-தாய்லாந்து CORPAT

- இந்தியக் கடற்படைக்கும் தாய்லாந்து நாட்டின் ராயல் கடற்படைக்கும் இடையே 32வது இந்திய -தாய்லாந்து ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடத்தப்பட்டது.
- இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஏவுகணை எதிர்ப்புக் கப்பலான இந்தியக் கடற்படைக் கப்பல் (INS) கர்முக், மற்றும் கம்ரோசின் ரக நீர்மூழ்கி எதிர்ப்பு ரோந்துக் கப்பலான ஹச்.டி.எம்.எஸ், தாய்லாந்து நாட்டுக் கப்பல் (HTMS) தயோன்சன் ஆகியவை இரண்டு நாட்டின் கடற்படைகளின் கடல்சார் ரோந்து விமானங்களுடன் இணைந்து CORPAT பயிற்சியில் பங்கேற்கின்றன.
- CORPAT என்ற பயிற்சியானது இரு நாட்டின் கடற்படைகளுக்கு இடையே புரிதல் மற்றும் இயங்குந் தன்மையை உருவாக்குகிறது.
- இது சட்டவிரோதமான முறையில் அறிவிக்கப்படாமல் (IUU - Illegal Unreported Unregulated) மீன்பிடித்தல், போதைப்பொருள் கடத்தல், கடல்சார் பயங்கரவாத நடவடிக்கைகள், ஆயுதமேந்திய கொள்ளை மற்றும் கடற்கொள்ளை போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் ஒடுக்குவதற்குமான நடவடிக்கைகளை நிறுவுவதற்கும் இது உதவுகிறது.

## COP27 மற்றும் COP28




- எகிப்து நாடானது ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்ற மாநாட்டின் 27வது பங்குதாரர்கள் மாநாட்டினை 2022 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- கிளாஸ்கோ நகரில் நடந்த COP26 மாநாட்டின் போது இது முடிவு செய்யப்பட்டது.
- எகிப்து நாடானது ஷர்ம் எல்-ஷேக் நகரின் செங்கடல் தங்கும் விடுதியில் இந்த மாநாட்டை நடத்த உள்ளது.
- அது மட்டுமின்றி 2028 ஆம் ஆண்டில் COP28 சர்வதேசப் பருவநிலை மாநாட்டை நடத்த

ஐக்கிய அரபு அமீரகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்




- இந்திய ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய இரண்டு புதிய முன்னெடுப்புகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- அந்த இரு முன்னெடுப்புகள் ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை விற்பனைத் திட்டம் மற்றும் ரிசர்வ் வங்கி - ஒருங்கிணைந்தக் குறைதீர்ப்புத் திட்டம் ஆகியவை ஆகும்.
- ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை விற்பனைத் திட்டமானது சில்லறை முதலீட்டாளர்கள் அரசாங்கப் பங்குச் சந்தையை அணுகுவதை மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசு மற்றும் மாநில அரசுகள் வழங்கும் பத்திரங்களில் நேரடியாக முதலீடு செய்வதற்கான புதிய வழியை இது அவர்களுக்கு வழங்குகிறது.
- ரிசர்வ் வங்கி-ஒருங்கிணைந்த குறைதீர்ப்புத் திட்டமானது, ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு எதிராக வாடிக்கையாளர் அளிக்கும் புகார்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை மேலும் மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மையக் கருப்பொருளானது, வாடிக்கையாளர்கள் தங்கள் புகார்களைத் தெரிவிக்க ஓர் இணைய தளம், ஒரு மின்னஞ்சல் மற்றும் ஒரு முகவரியுடன் 'ஒரே தேசம்-ஒரே நடுவம் ' என்ற அடிப்படையிலானதாகும்.

# மாநிலச் செய்திகள்

## வேளாண் சட்டங்களுக்கு எதிரான தீர்மானம் - பஞ்சாப் சட்டசபை

- பஞ்சாப் சட்டசபையானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று, மத்திய அரசின் மூன்று சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு உள்ளது.
- அந்தத் திடமானச் சட்டங்கள் சட்டத்திற்குப் புறம்பாக மாநில அரசின் களத்தில் நுழைந்து விட்டதாகக் கூறி இந்தத் தீர்மானமானது நிறைவேற்றப்பட்டது.
- மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக அம்மாநிலச் சட்டசபை நிறைவேற்றிய இரண்டாவது தீர்மானம் இதுவாகும்.
- முதல் தீர்மானம் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இந்தப் புதிய தீர்மானத்தை மாநில வேளாண் அமைச்சர் ரன்தீப் சிங் நாபா தாக்கல் செய்தார்.

## பஞ்சாப் பள்ளிகளில் பஞ்சாபி மொழி கட்டாயம்

- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பஞ்சாபி மொழி கட்டாயப் பாடமாக கற்பிக்கப்படும் என பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் சன்னி அறிவித்து உள்ளார்.
- 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பஞ்சாபி மொழி கட்டாயமாக்கப் படும்.
- இது மட்டுமின்றி, அலுவலகங்களிலும் பஞ்சாபி மொழியானது கட்டாயமாக்கப்படும்.

## நிமோகாக்கல் இணை தடுப்பூசி (PCV) திட்டம் – கர்நாடகா




- உலக நிமோனியா தினத்தை முன்னிட்டு உலகளாவிய நோய்த் தடுப்பு திட்டத்தின் கீழ் இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- குழந்தைகள் மத்தியில் நிமோனியாவால் ஏற்படும் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைக்கும் நோக்கத்துடன் இது தொடங்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## பூமியின் முதல் நிலப்பரப்பு

- க்ராட்டன்கள் (cratons) எனப்படும் பூமியின் முதல் கண்டங்கள் கடலில் இருந்து 3.3 பில்லியன் மற்றும் 3.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையக் காலகட்டத்தில் தோன்றியதாக ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.
- இந்தப் புதிய ஆய்வானது சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பெருங் கடல்களில் இருந்து கண்டங்கள் எழுந்தன என்ற பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தை எதிர்த்துக் கேள்வி கேட்டுள்ளது.
- ஜார்க்கண்டில் உள்ள சிங்பூம் பகுதியே முதன்முதலில் தோன்றிய கண்ட நிலப் பரப்பாக இருக்கலாம் என்றும் இந்த ஆய்வானது கண்டறிந்துள்ளது.
- 3.2 பில்லியன் ஆண்டுகளுக்கும் மேல் பழமையான நதிக் கால்வாய்கள், கடல் பரப்புகள் மற்றும் கடற்கரைகள் ஆகியவற்றின் புவியியல் அச்சுகளுடன் கூடிய, சிங்பூமில் உள்ள மணற்கற்கள் காற்றில் வெளிப்பட்ட ஆரம்பகால மேலடுக்கினைக் குறிப்பதாகவும் இந்த ஆய்வானது கண்டறிந்துள்ளது.
- சிங்பூம் பகுதியின் கண்ட மேலடுக்கினை உருவாக்கும் கிரானைட்டுகள் 3.5 முதல் 3.1 பில்லியன் ஆண்டுகள் பழமையானவை ஆகும்.
- இது மணற்கற்கள் 'முதல் நிலப்பரப்பு எப்போது உருவானது' என்றும், கிரானைட் 'முதல் நிலப்பரப்பு எப்படி உருவானது' என்றும் நமக்கு கூறுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★